ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2167/1 - 2020 මාර්තු මස 16 වැනි සඳුදා - 2020.03.16
*2167/1 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 16 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி 9/2016* (II)

**2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டம்**

*2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் 142 ஆம் பிரிவின்கீழ் சுகாதாரம் மற்றும் சுதேச மருத்துவ சேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

பவித்திரா வன்னிஆரச்சி (பா.உ.)
(சட்டத்தரணி),
சுகாதாரம் மற்றும் சுதேச மருத்துவ சேவைகள் அமைச்சர்.

கொழும்பு,
*2020, மாச்சு 16.*

**ஒழுங்கு விதிகள்**

*2020 ஆம் ஆண்டு சனவரி 29 ஆந் திகதிய 2160/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2020 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, மருத்துவ உபகரணங்களுக்கு விலை குறித்தல் ஒழுங்குவிதிகள் பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளது:*

(1) அதன் 8 ஆம் ஒழுங்குவிதியை உடனடுத்து பின்வரும் புதிய ஒழுங்குவிதியை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"8அ. ஆளொருவர் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபையின் முன்னதான எழுத்திலான அங்கீகாரம் இன்றி, இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் மருத்துவ உபகரணத்தை இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்தலோ அல்லது மீள் ஏற்றுமதி செய்தலோ ஆகாது.".

1A - PG 4759 — 612 (2020/03)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(2) அதன் அட்டவணையை இரத்துச் செய்வதன் மூலமும், பின்வருவனவற்றை மாற்றுவதன் மூலமும் கீழ்வருமாறு திருத்தப்படுகின்றது.

**அட்டவணை**

(ஒழுங்குவிதி 2)

தெரிவு செய்யப்பட்ட மருத்துவ உபகரணங்களின் அதிகபட்ச சில்லறை விலைகள்

| இல. | நிரல் I | நிரல் II |
|---|---|---|
| | மருத்துவ உபகரணங்களின் அங்கீகரிக்கப்பட்ட பெயர் | ஓர் அலகுக்கான அதிகபட்ச சில்லறை விலை (அசிவி) (இலங்கை ரூபாவில்) |
| 1. | கையாண்டு தீர்க்கப்பட வேண்டிய மருத்துவ மூன்று அடுக்குகள் முகமூடி- நெய்யப்படாதது (காதுக்கொளுவி வகை அல்லது கட்டப்படும் வகை) | 50.00 |
| 2. | முகமூடி- N95 வகை - (அறுவை சிகிச்சை/சுவாச/சுகாதார/மருத்துவ முகமூடி) | 325.00 |

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.